டாக்டர் கே. பி. இராமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வடக்கு அரியநாயகிபுரத்தில் உள்ள விவசாயிகளுக்கு பெரிதும் பயன்படும் விதத்தில் கடனா நீர்த் தேக்கத்தில் புதிய கால்வாய் வெட்டும் திட்டம் அரசிடம் இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட திட்டம் அரசின் குறிப்பிலே இல்லை.

கடலூர் தொகுதி திருவதி அணைக்கட்டு வாய்க்கால்

80—(* வினா எண் 10507) **திரு. வி. கோ. செல்லப்பா:** மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கடலூர் தொகுதியான வெள்ளப்பாக்கம், மருதாடு, தோட்டப்பட்டு, நந்தப்பட்டு கிராமங்களுக்கு திருவதி அணைக்கட்டிலிருந்து வரவேண்டிய தண்ணீர் வாய்க்கால் தூர்ந்து உள்ளதால் பாசன வசதி பெற முடியவில்லை என்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அது குறித்து அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) ஆம்.

(ஆ) நெல்லிக்குப்பத்திலிருந்து வெள்ளப்பாக்கம் ஏரி வரை வெள்ளப்பாக்கம் கால்வாயில் ஜூலை 1986-ல் தூர் அகற்றப்பட்டது. நந்தம்பட்டு, தோட்டப்பட்டு பகுதிகளில் தூர் அகற்றும் பணி நடப்பு நிதி ஆண்டிலேயே மேற்கொள்ளப்படும்.

(முற்பகல் 10-50)

திரு. வி. கோ. செல்லப்பா: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் தூர் வாரப்பட்டிருக்கிறதென்று சொன்னார்கள். அதற்காக நான் மகிழ்ச்சி அடைகிறேன். ஆனால் அந்தப் பகுதியில் தூர் வாரப்பட்டதாக எங்களுக்குத் தெரியவில்லை. ஏனென்றால் அந்த வாய்க்கால் பகுதியில் குடிசைகள் கட்டி, வாய்க்கால் தூர்ந்துபோய்

இருப்பதைப் பார்த்திருக்கிறேன். ஆகவே மாண்புமிகு அமைச்சரவர்கள் அந்தக் குடிசைகளை அகற்றி, வாய்க்காலைத் தூர் எடுத்துத் தரும்படி கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, வாய்க்கால் தூர்ந்து போவதற்கு குடிசைகள் கட்டியிருப்பது காரணம் என்று உறுப்பினரவர்கள் சொல்லியிருக்கிறார்கள். உடனடியாக அதைக் காலி செய்ய முயற்சி எடுப்போம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. வி. கோ. செல்லப்பா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள், திருவதி அணைக்கட்டிலிருந்து எத்தனை ஏக்கர் நிலங்களுக்கு தண்ணீர் பாய்கிறது என்பதையும், அதனால் எத்தனை பேர்கள் பயனடைகிறார்கள் என்பதையும் தெரிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அதற்கான குறிப்பு தற்போது என்னிடம் இல்லை. தனியாகக் கேள்வி போட்டால் பதில் கிடைக்கும்.

திரு. துரை அன்பரசன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, கேள்வியிலே குறிப்பிடப்பட்டுள்ள திருவதி அணைக்கட்டிலிருந்து வரும் அந்தத் தண்ணீர் பண்ருட்டி தொகுதியில் ஆரம்பமாகி முழுக்க முழுக்க நெல்லிக்குப்பம் தொகுதியில் வாய்க்காலில் ஓடி, கடலூர் தொகுதியில் முடிகிறது. மாண்புமிகு அமைச்சரவர்கள் குறிப்பிடும்போது தூர் வாரி இருக்கிறோம் என்று சொன்னார்கள். தூர் வாரியிருப்பது உண்மை. அங்கே இப்போது வேலை நடைபெற்றுக் கொண்டிருப்பதும் உண்மை. ஆனால் அந்த வாய்க்காலில் தண்ணீர் வரத்து 10, 15 ஆண்டுக்காலமாக வராமல் இருக்கிறது. காரணம், வீட்டு மனைகளாக அந்த வாய்க்காலை ஆக்கிரமிப்பு செய்து கொண்டிருக்கிறார்கள். எனவே அந்த ஆக்கிரமிப்புகளை அகற்றி, மீண்டும் அந்த வாய்க்காலில் தண்ணீர் வர தக்க ஏற்பாடுகளை உருவாக்கித் தருவார்களா ?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS

[1987 மார்ச் 24

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : பேரவைத் தலைவரவர்களே, அங்கே வேலை நடப்பதை ஒத்துக் கொண்டதற்காக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அங்கேயுள்ள குடிசை களை அகற்ற அரசுக்கு எந்தவிதத் தடையும் இல்லை. உடனடியாக காலி செய்யப்படும். அப்படி காலி செய்யும்போது, இங்கே பேசிய இரண்டு சட்டமன்ற உறுப்பினர்களும் சிபாரிசுக்கு வராமல் இருக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. ஜி. கே. ஜெ. பாரதி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, தமிழ் நாட்டிலுள்ள பல வாய்க்கால்கள் தூர் எடுக்காமல் இருப்பதாக அரசுக்கு தகவல் வந்திருக்கிறதா? அப்படியென்றால் அது பரிசீலனை செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன். தென் ஆற்காடு மாவட்டத்தில் குண்டியநல்லூர் பகுதியில், பெருமாள் ஏரி தூர் எடுக்காமல் இருப்பதாக அந்தப் பகுதி மக்கள் கூறுகிறார்கள். அதுகுறித்து அமைச்சரவர்கள் தக்க நடவடிக்கை எடுப்பார்களா?

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, தமிழகத்தின் பல பகுதி களிலிருந்து கால்வாய்கள் தூர் எடுக்க வேண்டுமென்று கோரிக்கை வந்து கொண்டிருக்கிறது. அந்தந்தப் பகுதிக்கு நிதி ஒதுக்கீடு செய்து, அதைச் செய்துகொண்டிருக்கிறார்கள். நம்முடைய நிதி ஆதாரங்களைப் பொறுத்து அந்தந்தப் பகுதியில் வேலை நடந்து கொண்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினரவர்கள் அதைப் பற்றி எழுதிக் கொடுத்தால், இந்த ஆண்டு எடுத்து, வேலை நடத்தப் படும்.

நெல்லை மாவட்டம், மணிமுத்தாறு பாசனக் கால்வாய்.

155—(*வினா எண் 3448) **திரு. மு. ஜான் வின்சென்ட் :** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நெல்லை மாவட்டம், மணிமுத்தாறு பாசனக் கால்வாய் ரிசர்வ் டாங்குகளை ரெகுலர் டாங்குகளாக மாற்ற அரசு உத்தேசித்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது செயல்படுத்தப்படும்?